உ

சிவமயம்.

புதுக்கோட்டைசமஸ்தானம் துலையானூர்க்கிராமம்

பெரியகள்ளுவயல் கலங்காப்புலி

கறுப்பண்ணசுவாமிபேரில்

சந்தக்கலிவெண்பா

ஆசிரியவிருத்தம்.

இஃது

சிவகங்கை சமஸ்தானம் மிதுலைப்பட்டி

சிற்றம்பலக்கவிராயராலியற்றியது.

ஷை சமஸ்தானம் கீழச்சிவல்பட்டி

மு. சா. முத்துக்கறுப்பஞ் செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

உ

சிவமயம்.

கலங்காப்புலி

கறுப்பண்ணசுவாமி பேரில்

சந்தக்கலிவெண்பா.

காப்பு.

பண்ணைவளஞ்சூழ்ந்துசெல்வம்பாலிக்குங்கள்ளூவயற்
கண்ணன்கலங்காக்கறுப்பணன்மேல்—பண்ணிசைந்த
சந்தக்கலிவெண்பாச்சாத்தவொருகோட்டுமெதத்
தொந்திவயிற்றோன்றுணை.

எத்திசையும்போற்றியிலங்குந்துலையானூர்க்
கத்தன்கலங்காக்கறுப்பணன்மேல்—சித்தமகிழ்
செந்தமிழாலேயகவல்செப்பமதகரடத்
தந்திமுகவன்றுணையதாம்.

கலிவெண்பா.

கார்பூத்தமேனிக்கடவுணெடுமான்மணந்த
ஏர்பூத்தசெந்திருப்பெண்ணென்றும்வளர் சீர்பூத்த
மேனாட்டிலாயிரங்கண்வேந்தனரசாட்சிபுரி
வானாட்டின்மிக்கவளம்படைத்த காநாட்டில்
சந்தானமாமலகஞ்சாதிமலர்விருட்ச
மந்தாரம்வாசமலர்க்கடம்பு செந்தாழை

சண்பகந்தெங்குசதாபலந்தேமாநரந்தஞ்
செண்பகம்பேரிஞ்சுதமரத்தம் கண்மலர்ந்த
புன்னைமருதுதேன்பொங்குமலர்க்குங்குமப்பூம்
பன்னீர்நெடுங்கொங்குபலாவெரசு நன்னீர்சேர்
பாதிரிமுந்திரிகைபைந்தாருபூங்கதலி
மாதுளைநீளத்திமரம்வகுளம் போதுசொரி
மாகமட்டுமோங்கிவளர்ந்தகமுகுவிளா
ஆகமகிழ்நாவலொடுமோமலகம் சேகரமாஞ்
சிந்துரந்திந்திரிணிதீம்புளிமாவாசமிகுஞ்
சந்தனமுஞ்சூழ்ந்திலங்குந்தண்டலையில் அந்தமிகுங்
கோலவரிவண்டுசுதிகூடவரிக்குயிலு
மேலக்கிளிகளும்பாட்டேயிசைப்ப மேலுமந்தி
ஈரப்பலாக்கனியையேந்தியிருகையதனாற்
சாரமுடன்மத்தளங்கள்தானடிக்கத் தீரமுடன்
ஓகையுடனப்பாடலுங்கேட்கமகிழ்ந்து
தோகைமயிருளத்துடனடிப்ப வாகனய
நாகணவாய்ப்புள்ளினமுநன்றாயதிசயிப்பத்
தாகமிகும்பூங்காதலையசைப்ப பாகமெனத்
தந்தாருங்கோங்குதியாகமெனப்பொன்முடிப்பு
இந்தரபரிசென்றேயீட்டிநிற்பச் சந்தாபங்
கண்டுகலிதொந்தமிடுங்காலின்விசையதனா
லந்தமரக்கோடதிர்ந்ததிர்ந்து முந்தவே
தாங்குங்கனிகடகர்ந்துவடிபட்டுடைந்து
ஆங்குமதுரவெள்ளத்தாறெழுந்து மூங்குதிரை
வெள்ளம்பரந்துகால்வீசிவிசைத்தெழுந்து

விள்ளரியவாரியெனவேமுழங்கி துள்ளும்வரால்
சேற்கெண்டைவாளைதிருக்கைமசரைசுறு
மேற்கொண்டுபாய்ந்துவிளையாடக் காற்கொண்டு
தாவிமலரோடைதடாகமடுவேரிதனில்
மேவியதுவெல்லாமுமேனிரப்பித் தாவியதில்
செங்குமுதநல்லசெழுந்தாமரைகுவளை
சங்கையில்லாமலேதான்படர்ந்து கங்கில்லா
வெள்ளோதிமங்களொடுமேவுசெறிபுள்ளினங்க
ளுள்ளமகிழ்சேவலுடன்பேடுந் தெள்ளிமையாய்ப்
பாராட்டிச்சீராட்டிப்பார்ப்புக்கிரைகொடுத்துத்
தாராட்டியேசிறகாற்றணைத்து நீராட்டிக்
கொண்டுவிளையாடிக்குலாவிப்பெருக்கமுடன்
மண்டுநெடுமேரிமடையதனாற் கொண்டோடி
பாய்ந்துமஞ்சளிஞ்சிபகரும்வசவாசி
வாய்ந்தகருணைவள்ளிவான்பயிர்கள் ஈந்த
தேங்குகதலிகன்னல்செந்நெலுமுப்போகம்வள
மோங்குவிளைதுலையானூரதனிற் பாங்காய்க்
கடல்போல்பெருக்கமிகுங்கள்ளுக்கணவாயி
லிடமேற்கரையதனிலேதான் திடமேவும்
மண்டபம்பொற்றூபிமதிற்சிகரகோபுரங்க
ளண்டமுலாவியபொன்னாலயத்தில் எண்டிசைக்குஞ்
செங்கோலரசாட்சிசெய்யுமகுடாதிபதி
துங்கரதகெசதுரங்கபடை அங்கமுற்றோர்
பூரணபுட்கலைப்பெண்பூவையிருவர்புண
ராரணர்முந்நூலணிமார்பர் தாரணியும்

செண்டாயுதம்படைத்தசெங்கைச்சிலைவீரர்
தண்டாரும்பூந்துளவத்தாரினுர் கொண்டாடும்
ஒருமாசாத்தருயர்வெள்ளைவாரணத்தார்
ராரியர்வானப்பிரஸ்தத்தராகவந்தோர் சீரிலகுங்
காரினிறத்தர்கடல்வண்ணர்சங்கிராமர்
சூரபராக்கிரமதுரந்தரிகர் பேரிலகு
மன்னர்மண்டலீகர்தினம்வந்து திறையளக்குஞ்
சனனி திருமூலாலயமுந்தான்படைத்தோ ரன்னைதரு
தந்திமுகவனயிருங்கிமயிலேறிநிதம்
வந்தகந்தசாமிவடிவேலர் அந்தமிகும்
மிக்கதிரிசூலமழுவேந்தும்ரணவீரபத்திரர்
வக்கிரதந்தமூர்த்திவடுகேசர் முக்கியமிகு
களபமணிதிண்புயந்தான்கட்டழகனன்ப
னழகுகருப்பணனென்னையன் யிளமைபெறும்
ஒப்பெரியசெம்பொன்னையோடிக்கொணர்ந்துவருங்
கெப்புலிக்குட்டியெனுங்கீர்த்திமான் மெய்ப்புகழ்சேர்
சின்னக்கறுப்பாசெயலாடசன்னுசி
கன்னிமார்தொட்டிச்சிகாரியவான் பன்னரிய
துங்கபரிவாரர்படைசூழக்கிரணமிகுந்
தங்கமுடிசூடியரசாட்சிபுரி யெங்கோன்
வேதன்முதல்விண்ணவருமேலட்டதிக்கிலுற்ற
மூதுலகும்வந்துபணிமூர்த்தியான் நாதனெங்கள்
கள்ளுக்காட்டையன்கடாக்ஷபரிபூரணத்தான்
வள்ளல்மணிவாசல்மதிமந்திரியே விள்ளரிய
உச்சினிமாகாளியுமைசத்தமாதாக்கள்

கச்சிகாமாக்ஷியம்மைகன்னிமார் பட்சமிகும்
சாத்தையன்மாரியம்மைதானிவர்களாலயத்திற்
காத்ததிகாரஞ்செய்யுங்கட்டழகா ஏத்தரிய
பூவிற்கறுப்பாயோர்பொன்னதினிலேகறுப்பாய்க்
காவிமதன்வில்லிற்கறுப்பதுவாய் மேவிவிளை
செஞ்சாலியிற்கறுப்பாய்ச்சேண்மதியினிற்கறுப்பா
யஞ்சுபஞ்சவர்ணமதிற்கறுப்பாய் செஞ்சிலைக்கை
ராமன்தேகங்கறுப்பாய்நண்ணியதோர்முக்குணத்தின்
தாமதகுணங்களதுதான்கறுப்பாய் வாமநிதி
யோங்குநவமணியிலொன்றுகறுப்பதுவாய்த்
தாங்குமதவாரணமுந்தான்கறுப்பாய் நீங்கரிய
நீலகண்டர்தங்கழுத்திலேதான்கறுப்பதுவாய்
சாலநறுநீரிலதுதான்கறுப்பாய் மேலிலகு
சத்தமேகங்கறுப்பாய்த்தாவியகல்லிற்கறுப்பாய்
வத்திரங்கள்மீதில்வருகறுப்பாய் எத்திசையும்
விண்ணில்மண்ணிலுற்றுவிளங்குபலசீவசெந்திற்
கண்ணிற்கறுப்பாய்க்கலந்துதான் எண்ணுகின்ற
சீரனந்தகாலஞ்சிறந்தேதகன்டாகைப்
பேரனந்தம்பெற்றபிரபலனே நேரும்
அருவிசொரிசோலைமலையானதலந்தன்னில்
மருவியதல்லாகுளத்தில்வாய்ந்த திருமதுரை
கொத்தளத்திலேவடக்குக்கோபுரத்தின்மீதினிலும்
வர்த்தனைசேர்கோம்பைமலைதனிலும் புத்தூருக்
கோட்டைத்தலத்தினிலுங்கொல்லிமலைமீதினிலு
நாட்டமிகுமாம்பூண்டிநன்னகரிற் றேட்டமிகும்

முத்திரைச்சந்திமுதிருமமராபதியிற்
சத்தியகிரைகம்பத்தடியினிலும் துத்தியஞ்சேர்
பூத்தவுறங்காப்புளியினிழலதனிற்
சாத்துகட்டுமாவடித்தலத்தினிலும் யேற்றமிகும்
யெங்கிலமேலோங்குபதினெட்டாம்படியினிலும்
பன்னுமலையாளப்பதிதனிலுஞ் செந்நெல்விளை
சிங்கைநகரிற்சிறந்திடும்வேலங்குடியி
லங்கமிகுதொண்டரகந்தனிலும் செங்கயலைத்
தத்துந்திரைக்கடல்சூழ்தாரணிமேற் றுனுகச்
சித்துவிளையாடல்புரிதேவனே கொத்தலரும்
கட்டழகன்முத்துக்கறுப்பனருமைக்கருப்பன்
சிட்டர்சமையக்கறுப்பன்சீர்கறுப்பன் கொட்டமிடும்
துட்டக்கறுப்பன் துரைக்கறுப்பன்சந்தானஞ்
சட்டமுடனேதந்தருள்கறுப்பன் இஷ்ட
கறுப்பனுரிமைக்கறுப்பன்சஞ்சீவிக்
கறுப்பன்வளர்சோலைக்கறுப்பண்ணன் உறுக்கும்
அரியகறுப்பனருள்சங்கிலிக்கறுப்பன்
பெரியகருப்பனெனப்பேர்பெற் றிருநிலமேல்
யெண்ணுமனந்தம்பேர்களிப்படியாப்பெற்றருளும்
அண்ணலேசூரவீராதிபனே யெண்ணாது
நின்றமருவலர்களெஞ்சந்திடுக்கிடவே
கொன்றுசெயம்பெற்றகுடோரியே சென்றுவரும்
நாடும்வலுப்பிரமராக்ஷதப்பேயானதனைச்
சாடுகின்றவீரசரபமே தேடியே
வெய்யகபடவஞ்சமேமிகுந்தபேய்கடனை

செய்யசமராடுபெலச்சிம்மமே   வையகமேல்
யேரனையகோடிமந்திரத்திலங்காமல்வரும்
வீரப்பிரதாபவரிவேங்கையே   தாரிலகும்
வண்ணமுலைமாதர்மடலெழுதிமையல்கொளுங்
கண்ணனைநேரானதுள்ளுகாளையே   அண்ணலே
பாரகத்திலன்பர்களைப்பாலித்துரக்ஷித்துத்
தாரணிமேல்வைத்தமிர்தசஞ்சீவியே   யோகத்தில்
சாரமிகுமெய்யடியார்தன்னடியார்மீதுதொட்ட
வாரந்தவரூதமாமணியே   தீரமிகும்
ஏவல்பில்லிசூனியங்களெல்லாம்பொடிபடவே
தாவிமிதித்தேறுமததந்தியே   பூவுலகில்
நாட்டுமெறுபத்துநாலுகலைஞானவித்தை
ஆட்டையுற்றோர்க்குள்ளடங்காவாழியே   ஈட்டும்
இருமாநிதியேயிலகுகருணாநிதியே
தருமாநிதியேதயாநிதியே   பெருகுபுகழ்
சங்கநிதியேமுனிவர்தானவர்க்குமெட்டாத
வங்கநிறைகின்றநெடுவாரிதியே   துங்கமிகுந்
தேடக்கிடையாத்திரவியமேதெள்ளமுதே
நாடக்கிடையாநவரசமே   பீடுயரும்
கற்கண்டேதேனேகணுவிலாச்செங்கரும்பே
சொற்கினியபாகேசுடர்மணியே   அற்புதமே
முக்கனியேயின்பமுதிருஞ்சுவைரசமே
சர்க்கரையேமுத்தமிழின்றண்சுவையே   பொற்பிலகு
பொற்பூவின்வாசனையேபூரணசந்திரோதயமே
அர்புதமேயெவ்வுயிர்க்குமாதிபனே   தற்பரனே

கண்ணின் மணியொளியேகற்பூர தீபமே
பண்ணிசையும்பாட்டின்பழம்பொருளே எண்ணரிய
சோதிப்பிரகாசசுடர்மணியேபோதநிறை
ஆதிபனேவானுலகிலேந்தருவே சீதரனே
மெய்யனுக்குப்மெய்யனேமீறுங்கபடமுறு
பொய்யனுக்குபொய்யானபூபதியே அய்யனே
வீறுக்கிரவீரமிகுமேவலர்நெஞ்சம்பதைக்க
சீறிக்கிழிக்குமாண்சிங்கமே பேறுபெறும்
நற்றவங்கள்செய்யும்நவகோடிசித்தர்களைக்
கொத்தடிமைகொண்டகுருசாமி முற்றும்
கிளைக்குமுனிவோர்களுக்குங்கிட்டாமருளு
முளைத்தரசவாதமூலிகையே துளக்கமுறும்
மைக்கண்மடவார்மஞ்சள்வாடையிலேபின்றொடரும்
சொக்குப்பொடிக்காரச்சுந்தரனே ஒக்கும்
சகலசாம்பிராச்யமெல்லாந்தந்தருளுஞ்சாமி
அகிலசனரெட்சகனேவையா புகழும்
சென்னியிற்சொர்னஞ்சிறந்ததலைப்பாகையணி
பொன்னுதலிற்கஸ்தூரிப்பொட்டுமிட்டு மின்னக்
காதிலெழுத்துக்கடுக்கன்முருகணிந்து
சோதிகலிக்கித்துராயணிந்து யோதும்
வன்னப்பதக்கன்முத்துமாலைநவகண்டிமணி
மின்னுசந்திராரம்விலைமீறுபணி பொன்னூல்கள்
நாகரத்தினப்பதக்கம்நன்மோகனமாலை
வாகுவலயஞ்செவந்திமாலையிட்டு ஆகமகிழ்
தங்கவளைதோடாதருமுடுகுபாசுபந்து

அங்கமிகுசெங்கைவிரலாழியிட்டுத் தொங்கச்
சதங்கைமணியரைஞாண் தங்கவொட்டியாணம்
இதம்பெறுபொன்னுற்சரிகையிட்ட புதியவஸ்திரம்
இடையிற்கருங்கச்சையிட்டமுடன்கட்டித்
துடைக்கிசைந்தசல்லடமுடங்தொட்டு திடக்கும்
சத்தமிடும்வீரதண்டைச்சதங்கைசிலம்
புற்றபதமீதினிலணிந்து மத்தமொடு
கோத்தமுள்ளுப்பாதகுறடதனிலேறியே
சீர்த்தியுடனுடல்புரிதேவனே பார்த்திபனே
அகிலமசையவராவின்முடிநெளிய
சிகரவடமேருமஷ்டதீவும் மிகநடுங்க
தித்திமிதாவென்றுநடம்செய்யும்பரிமுகத்தில்
முத்துநிறைத்தமுகமூட்டுவைத்துக் சித்ரக்
கடிவாளமிட்டுக்கலிக்கித்துராயும்
வடிவாகவைத்துமணிக்கலனை படிவாங்
வன்னமுதுகிலிட்டுவாலாசமுமமைத்து
மின்னுமுமாபட்சிநெற்றிமீதில்வைத்துச் சொன்னமிகும்
சித்திரமணிச்சதங்கைசெம்பொற்கழுத்திலிட்டுத்
தத்திநடஞ்செய்காலிற்றண்டையிட்டு மெத்தவலு
வீரமிஞ்சிலாகுகொண்டுமீறிவிழிசிவந்து
நாரியர்போலக்கவடநண்ணியே தீரமுடன்
மிக்கவுமேநெய்க்கவளமேன்மேற்றெவுட்டவுண்டு
தொக்கவண்டபானுதுரகதத்தைத் தார்க்கமிட்டு
மேற்கொண்டெதிர்த்ததனைவெற்றிகொண்டுபூவில்வந்து
காற்கொண்டேயண்டகடாகமட்டு மாற்கொண்டு

பஞ்சகதிகொண்டுநடம்பண்ணியேசுற்றிவரு
மஞ்சுலவுமுக்கிரமிரும்வாம்பரிமேல்　　　ரஞ்சிதமாய்
எறும்பரிநகுலனென்னப்பவனிவரும்
வீறுபெறுஞ்சுத்தரணவீரனே　　　பேறுதவும்
கட்டாரிநேரிசம்வாள்கையறிவாளீட்டிபதி
னெட்டாயுதம்படைத்தவிங்கிதனே　　　தொட்டாரும்
பார்க்கும்பொழுதுபலகோடிமந்திரத்து
நீக்கமின்றியஞ்செழுத்தாய்நின்றோனே　　　தீர்க்கமுடன்
எள்ளுக்குளெண்ணெயைப்போலின்பமலரில்மணம்போல்
விள்ளரியசொற்குள்விளைபொருள்போல்　　　தெள்ளரிய
அண்டசராசரங்கள்யாவுநிறைந்தமணிக்
கொண்டலேதேவர்தொழுங்குஞ்சரமே　　　யெண்டிசைசூழ்
திக்குத்திகாந்தவரைசெல்லும்வழிக்கெல்லாம்
பக்கத்துணைவந்தபார்த்திபனே　　　மிக்கதொரு
பட்டமரந்தழையப்பண்ணும்வலுக்காரா
கொட்டமிடுந்துட்டர்குடாரியே　　　சட்டமுடன்
ஒட்டியஞ்செய்கம்பளத்தாருக்கிரமிகுபாருவையுங்
கட்டிமறிக்கின்றதளகர்த்தனே　　　அட்டியின்றி
வந்தாலயத்தில்வணங்கிவரங்கேட்டவர்க்குச்
சந்தானந்தந்ததயாபரனே　　　சிந்தைமகிழ்
ஆலயங்களெல்லாமலைந்துமனம்வருந்தி
மேலுமுந்தனாலயத்தின்மீதில்வந்து　　　ஞாலநிறை
சேயனேயெந்தனுக்குச்சேயன்பிறந்திடவே
நீவரந்தாவென்றுநிகழ்த்தியபின்　　　ஆவலுடன்
தந்தோமெனநீறுதந்துதவிச்சொன்னதற்பின்

அந்தநிலைகெர்ப்பமதுதரித்து சிந்தைமகிழ்
திங்கள்பத்துஞ்சென்றுநல்லசேயன்பிறந்தவுடன்
மங்களஞ்சூழ்கோயில்வலம்வந்து பொங்கலுடன்
முப்பூசைவாங்கிமுறையாய்த்தன்பேரிட்டு
தப்பாமல்தன்னடிமைதானாக்கி யெப்போதும்
யித்தலமேற்கீர்த்திகொண்டயிங்கிதசல்லாபனே
முத்தையனேயாதிமகாமூர்த்தியே கர்த்தனே
பாறையதனிலொருபங்கயம்புட்பித்தாலும்
மாறியெழுவாரிதியும்வற்றிடினும் கூறரிய
தங்கமகாமேருகால்சாய்ந்துநிலைபேர்ந்திடினும்
கங்குல்பகலாகக்கண்டிடினும் துங்கசிலா
சாதனம்போலோங்குதருராமபாணம்போல்
மாறாதயவாய்ச்சொன்னசொல்லுமாறாத நாதனே
அஷ்டகுலவெற்புமுதலானமலைகளெல்லாஞ்
சட்டமுடன்காவல்கொண்டசல்லாபா துட்டமிடும்
வெய்யகலிகோபனென்றன்மீதேயணுகாமல்
வையகமேற்சீர்கொடுக்குமாதவனே அய்யனே
முத்தர்நவகோடிசித்தர்முனிவருமேதேடி
வைத்தகருகூலமாநிதியே சுத்தாற்றில்
தங்கமுடிசூடியராசாக்ஷிபுரிராமரைப்போல்
செங்கோல்செலுத்துஞ்செயதரனே யிங்குலகிற்
தீராப்பிணிக்கவிழ்தஞ்செய்துதவியப்பிணியை
வாராமற்காக்கும்வயித்தியனே சீரான
யிந்திரசாலவித்தையெல்லாந்தெரிந்தருளும்
தந்திரனேயன்பர்சகாயனே கந்தமிகு

மன்னர்மண்டலீகர் தினம்வந்து திறையளக்குஞ்
சந்நிதிபெற்றதளஞ்சியனே சொன்ன
சடஞ்செய்வினையகலத்தான்செய்கிருபைக்
கடலேயமிர்தகலாநிதியே தடமகுட
கட்டழகாவாலயத்திற்காம்பிரிய துல்லியசிம்மக்
குட்டியெனவீற்றிருக்குங்கொற்றவனே கிட்டிவரும்
நெஞ்சிற்றுயரமெல்லாம்நீக்கியருள்கொடுக்கும்
பஞ்சதருவேகிரணபானுவே விஞ்சைபெறும்
சித்துவிளையாடலெல்லாஞ்செய்கின்றவல்லசித்தன்
கொத்தடிமைபெற்றகுடியதனே விர்த்திபெற
ஒன்றுபத்தாய்மேன்மையுயருங்குடியாக்கி
மன்றினிலேவாழ்விக்குமாதவனே யென்றென்றும்
சோலைகளும்வாவிகளுஞ்சூழும்பெருந்தடஞ்சூ
ழாலயமும்பெற்றருளென்னையனே மேவிலகு
கொற்றமிகுமாற்றவரைக்கொன்றுசெயம்படைத்து
வெற்றிகொண்டசுத்தரணவீரனே பற்றிவந்து
லூட்டிசெய்யும்பேய்கடனை நூறித்தலைகள்சுற்றி
ஆட்டிவைக்கும்வீரசூராதிபனே நாட்டமொடு
வாயாதகாரியமும்வாய்க்கும்படிக்கருள்செய்
காயாம்பூவண்ணாகதாயுதனே வீயாது
பாரம்பரையாய்ப்பணியடியார்மேற்றெருட்ட
வாரந்தவராதமாமணியே தீரமிகு
சிவராத்திரியிற்றிருவிழாக்காட்சி
தவறாதெல்லோர்காணத்தானே உவமையதாய்
ஆட்டமுங்கேள்விசொல்லுமாரப்பமுங்களரிக்

கூட்டமிடுஞ்சந்தடியுங்கும்பிடுவோர் தேட்டமும்
பெற்றகருணைப்பிரதாபகிருபாகரனே
வெற்றிமுல்லைத்தாரணியும்வேந்தனே உற்ற
மதிமயக்கஞ்சோம்பலொடுமோராட்டம்வஞ்ச
மதிரடிகனாவிருட்டியான திதுவெல்லாம்
பானுதனைக்கண்டபனிபோலகன்றிடுமே
வானிதியேயானந்தமாக்கடலே சேனைபெற்ற
கள்ளுக்காட்டையன்கனகமணிவாசலுக்கு
வள்ளலெனவந்தமதிமந்திரியே தெள்ளரிய
மோனபரானந்தமுதல்வனேயத்தோயத்
தீனசனரக்ஷகசிகாமணியே மேன்மைபெறு
வேதமுதலாய்விளங்கும்பழம்பொருளே
நாதபரிபூரணவிலாசனே ஓதும்
சராசரங்களெல்லாமுந்தானாகிநின்ற
புராதனவண்டர்பணிபூமானே பிரானே
துய்யனேயன்னசத்திரசோமனேவீச்சரிவாட்
கையனேமேலாந்தகாலனே ஐயனே
நானாட்டில்மிக்கநலம்படைத்துமேலோங்குங்
கானாடுகொந்தருளுங்காவலனே பானாடும்
பூசாங்கம்பெற்றபுனிதாகெடிசெலுத்தும்
ராசாங்கமோடிபெறும்ரஞ்சிதனே தேசாகும்
பத்தர்களைமுற்றிலுமேபாதுகாத்தாதரிக்கு
முத்தையனேமேலாமுதற்பொருளே சித்தமகிழ்
பொன்னாபரணம்புனையும்புயாசலனே
தென்னார்கமலமுகச்சீதரனே சொன்னாடும்

அகிலபிலத்திலுள்ளவையன்கறுப்பரெலாந்
தகமையுடன்வந்தவனீதானே மகிழும்
தவளநகையார்கள்மடருனெழுதும்ரூப
அழகுகறுப்பனுநீயாகும் வளமைபெறும்
தேவனீமெய்யானதெய்வநீமேலோங்கு
காவலனீகண்ணிற்கருமணிநீ பூவுலகில்
பாதாளவஞ்சம்படைத்தவலாஷ்டகனீ
கோதிலாஞானக்குருமணிநீ யோதரிய
தொண்டரிடமகலாத்துய்யபரிசுத்தனீ
தண்டதுர்த்தண்டவுத்தண்டனீ தெண்டிரைசூழ்
வங்கக்கடலுலகோர்வந்துபணியக்கொலுவிற்
றுங்கத்துடன்வாள்துரைமகனீ அங்கமிகும்
சீராளனேமதுரைச்செந்தமிழ்க்குநீட்டுசெங்கைத்
தாராளன்சிம்மாவதாரனே ஏராரும்
தண்டாயுதனேசயதரனேயெவ்வலகுங்
கொண்டாடப்பெற்றகுணகரனே அண்டித்
தொடுத்தபடியேதுசங்கட்டியேதான்
முடித்துவிடுகின்றமுதல்வா படித்தலமேற்
தேருந்திருநாளுந்தீர்த்தமொடுகாட்சிபெறுஞ்
சீருயருமெந்தைமகாதேவனே பாரிலுயர்
மந்திரத்தில்சித்தனேமாமலைசஞ்சீவியே
தந்திரத்தில்மீருகுருசாமியே யெந்தையே
பாற்கடல்போற்செல்வம்படைத்தகாளுட்டவரைத்
தீர்க்கமுடன்வாழ்கவருள்செய்தோனே தேக்கும்
திடங்குலவுங்காசியிமசேதுவரைக்கு

மடங்கட்டியன்னமலிவாய் நடந்திடவே
செய்யுமதியோகாதிரவியகுபேரசெல்வர்
வையகமேற்கீர்த்திபுனைமானபரா மெய்யாளர்
ஏழுநகர்வணிகரென்றும்புரோவிருத்தியதாய்
வாழும்படிகிருபைவைத்தோனே நீளும்
வானமழைபொழியமன்னுயிரெலாந்தழைக்க
தானம்விளங்கவருடந்தோனே ஆனதிரு
வாக்குமனமுமொன்றாய்வந்துபணிவோரைநிதங்
காக்குங்கலங்காக்கறுப்பணனே மேற்கிலுயர்
விண்ணூர்மதிபோல்விளங்குமுகங்கஞ்சமலர்க்
கண்ணுகலங்காக்கறுப்பணனே யெண்ணார்
சரநேர்விழியார்கடான்மையல்கொளும்பூங்
கரனேகலங்காக்கறுப்பணனே விரையா
திடக்குமிலங்கைநகர்செல்லக்கடலைக்
கடக்குங்கலங்காக்கறுப்பணனே தொடுக்கின்ற
சொன்னூடும்பாவலர்க்குச்சொர்ணமழைமாரிபெய்யுங்
கன்னுகலங்காக்கறுப்பணனே பொன்னூடும்
சீரார்கருணைச்செயதராமுற்றுமலங்
காராகலங்காக்கறுப்பணனே பாராளும்
தாக்குமகாசெல்வர்தழைக்கின்றகானூடு
காக்குங்கலங்காக்கறுப்பணனே தேக்குகின்ற
கோலாகலனெனவேகொஞ்சுபரியேறுதண்டைக்
காலாகலங்காக்கறுப்பணனே மேலெல்லாம்
செய்யார்களபமணிதிண்புயாவீச்சரிவாட்
கையாகலங்காக்கறுப்பணனே மெய்யாக

வீருய்வரும்பேயைவீறடக்கிக்கட்டும்பலுக்
காருகலங்காக்கறுப்பணனே கூருனே
பூமாதுளவமணிபூபாரதிக்கிசைந்த
காமாகலங்காக்கறுப்பணனே பாமாதும்
செந்திருவுமாருதசெல்வமணிமைந்தர்களு
வந்துதவிசெய்வாய்மகிழ்ந்து.

௨

சிவமயம்.

ஆசிரியவிருத்தம்.

சீரிலகுகத்தியரிவாள்தாங்குசெங்கையுஞ்
செய்யகேயூரபுயமும்
திகழ்சந்திரகாவியுறுமாறக்கட்டுகொண்டையுஞ்
சிறந்திடுமதிவதனமும்
தாரிலகுமாலையாபரணநிறைமார்பமுந்
தருகருங்கச்சையுடையும்
தண்டையொடுகிண்கிணியொலித்திடவசைந்தாடு
தாமரைநிகர்த்தபதமும்
பாரிலுயரடியார்கடரிசிக்கவிகபரம்
பாலிக்கும்வரதசீலா
பண்ணைசூழ்கள்ளுவயலாலயந்தன்னிலே
பரிவாயிருந்தமுதலே

காரிலகுகாயாம்பூவண்ணனே தண்ணமிர்த
கருணலயப்பிரதாபா
கலன்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (1)

வட்டமுலேமடவார்கள்கையில்வைத்தேதின
மடலெழுதுமன்மதனுநீ
மஞ்சள்மணவாடையிற்பின்ருெடர்ந்தேதரும்
வாடைப்பொடிக்காரனீ
பட்டம்பொருந்தமதயானேநீயிந்திரசம்
பத்துதவுபஞ்சதருநீ
பகர்பில்விசூனியமேவல்நொடிதூளாய்ப்
பரத்தியபுலிக்குட்டிநீ
தொட்டியர்கள்மந்திரக்கட்டினிலடங்காத
சூராணவீரதுரைநீ
சொல்லரியகளக்காடர்வாசல்மதிமந்திரிநீ
சூழ்சேனேயாதிபதிநீ
கட்டழகதாய்ரத்னசிம்மாசனத்திலதி
காரஞ்செய்கின்றவனுநீ
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (2)

நிலேயானசவுபரியசந்தானம்வரவேணு
நித்தியம்வந்தெய்தவேணும்
நீயெனதுகுலதெய்வநானுனதுகுடியென்று
நேசித்திருக்கவேணும்
தலமீதுவேறுமொருவில்லடைவராமலே

தானும்ரக்ஷிக்கவேணும்
சதாகாலமுமுன்னைவாழ்த்தியேநின்னருள்
தயவுடன்பெறவும்வேணும்
பலனீடுதேவதாபத்திவரவேணுமுன்
பவவினைகளகலவேணும்
பாலர்க்குநின்பேர்தரிக்கவேணும்வேண
பவுசும்வந்தெய்தவேணும்
கலைஞானபோதநெறிவரவேணுமுன்னையெக்
காலுந்துதிக்கவேணும்
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (3)

தஞ்சமென்றேயுனதுபாதாரவிந்தந்
தனைப்பணியுமன்யருக்குச்
சஞ்சலப்பிணிநோய்களணுகாதுசொல்லரிய
தாரித்திரம்வராது
நெஞ்சினில்நினைத்தபடிகைகூடுமோதார
நேயசற்காரியமெய்தும்
நெட்டூரமதிரடியவஸ்தைகளுமணுகாது
நீடாயுள்கருணையெய்தும்
வஞ்சனைகள்செய்கிரகசாரங்களணுகாது
மாற்றலர்கள்பகைவராது
மாயாவதாரனேயனந்தகோலாகலா
வாலகிருஷ்ணவதாரா
கஞ்சமலர்வாவிசூழ்கள்ளுவயல்தன்னிலெக்
காலும்வளர்பரிபூரண
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (4)

அங்கவங்கம்டில்லிபப்பரஞ்சோனக
மாரியந்துளுவமீழம்
அச்சிகுச்சரமச்சமகதம்யாழ்ப்பாணமொடு
ஆந்திரமராடமொட்டியம்
சிங்களமுதலானயெண்ணேழுதேசஞ்
சிறப்பாய்விளங்குமட்ட
திசையெலாங்கெடிகாவல்கொண்டதிகாரஞ்செய்
தீரவீரப்ப்ரதாபா
சங்கிராமகெம்பீரதோர்த்தண்டமார்த்தண்ட
சமுகசுமுகப்ரதாபா
தத்துவாம்பரிமீதிலேறியேபவனிவரு
சமரஜெயமிகுநகுலனே
கங்கையிமசேதுபுகழ்கள்ளுவயல்மீதில்வளர்
கருணாகரப்ப்ரதாபா
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (5)

சாற்றரியதமிழ்வாணர்கவியைமழைமாரியாய்த்
தான்சொல்வதொருபாரிசம்
சங்கீதமேளங்கள் துத்திபுள்ளாங்குழல்கள்
தவில்றைவதொருபாரிசம்
எத்தியேதுதிசெய்துசந்தடிவிலக்கிநின்
றேபணிவதொருபாரிசம்
எனதுகுலதெய்வநீயாமுனதுகுடியென்
றிறைஞ்சிடுவதொருபாரிசம்

நேத்திக்கடன்சொன்னகாணிக்கையிதுவென்று
நிதிசொரிவதொருபாரிசம்
நிலையானமைந்தர்வரம்வேண்டுமென்றேதொழுது
நிற்பவர்களொருபாரிசம்
காத்தடிமைகொண்டிடுமெனதுகுலதெய்வமே
கருணைகடாக்ஷமுதலே
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்.
கலங்காக்கருப்பண்ணனே. (6)

குலிக்கிக்குலிக்கிவாய்விட்டலறியிறுமாந்து
கோரமொடுகெண்சிவந்து
கொட்டாவிவிட்டுநெட்டுடலையுமுறுக்கியே
கொடூரமொடுபற்கடித்துத்
துலுக்கியேதலைசுற்றியாடிடும்பேயைநிர்த்
தூளிபடவேசாட்டையால்
துடித்திடவடித்திடப்போரேனெனச்சொலித்
தூரவழியோட்டிவிட்டு
பலிக்கவெண்ணீறுதந்துமுப்பூசையும்
பரிவுடன்வாங்கிநாளும்
பாலன்பிறக்கவுஞ்செய்துதன்பேரிடப்
பண்ணியும்பரிவதாக
கலிக்குமெய்த்தெய்வமெனவந்தகருணைகரா
காயாம்பூமேகவண்ணா
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கருப்பண்ணனே. (7)

நந்தனவனஞ்சோலைநீடன்னசத்திர
நலமிகுமடாலயங்கள்
நவிலரியசெந்தாமரைத்தடங்கூபங்கள்
நலமேவுமாலயத்தில்
தந்திமுகன்மயிலேறுசேவற்பதாகையான்
ஷண்முகன்வீரபத்ரன்
தருணவடுகேசர்சொல்லழகுகறுப்பண்ண
சாமிசின்னக்கறுப்பர்
சுந்தரமிகும்லாடசன்னாசிகன்னிமார்
தோட்டிச்சிசங்கிலிதனைத்
தொட்டிகறுப்பரொடுபரிவாரருந்தினஞ்
சூழ்கவேகொலுவிருக்கும்
கந்தமிகுதிண்புயவிலாசபரிபூரணா
கட்காடமதிமந்திரியே
கனல்பூத்தமார்பரிருநிலங்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (8)

தெண்டிரைவளைத்தபுவியெங்கினுமுயிர்ப்பயிர்
செழிக்கவான்மழைகள்பொழியத்
தேசமன்னவர்கள்செங்கோறழைத்தோங்கிச்
சிறக்கவந்தணரானினம்
தண்டமிழ்விளங்கநின்சந்நிதிவிளங்கவிளை
சைப்பதிதழைக்கவந்தோர்
தந்தியைநிறுத்துமகமேரையுரைகண்டுபொற்
சவடிதாம்பாகவீந்து

பண்டுகாவிரிப்பூம்பட்டினமிருந்துவரு
பாண்டியன் றனைக்கவந்தோர்
பகருமிந்திரசெல்வர்வற்ருதபாக்கியர்
பாரிலுயர்வாழ்க்கைபெற்றுக்
கண்டநவநிதிபெற்றயேழுநகர்வணிகேசர்
கனதையொடுபணியும்வரதா
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (9)

தருணவேளையினுமொருசமயசமயத்திலுஞ்
சந்தோஷகரமதாகத்
தான்வரும்வீரரணசங்கமேகலியுகச்
சாதுவேவரப்பிரதாபா
மருநலமிலாப்பிர்மராக்ஷசப்பேய்களை
வாட்டித்துரத்தியோட்டும்
வலுமீறுசரபமேவன்பிணிக்கினியவொரு
மருந்தானசஞ்சீவியே
பொருணயத்தமிழ்சொலுங்கவிவாணருக்குநிதி
புனிதமொடுதரும்வள்ளலே
புகழ்நீலமேகமெனுமழகுள்ளகறுப்பரைப்
பொருந்துதுணையாய்ப்படைத்து
கருணையுரிமெய்ஞ்ஞானதீபமேதொண்டரைக்
காத்துரட்சிக்குமுதலே
கனல்பூத்தமார்பரிருநிலம்போற்றவேவளர்
கலங்காக்கறுப்பண்ணனே. (10)

முற்றிற்று.